செ.வெ.எண் : 58 /ஜூன் நாள் : 30.06.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

# 2017-2018-ஆம் ஆண்டில் நீர்வள நில வள திட்டம் மற்றும் குடிமராமத்து திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் மாவட்டத்தில் ரூ.30.87 கோடி மதிப்பில் மொத்தம் 144 கண்மாய்களில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டத்தில் 2017-2018-ஆம் ஆண்டில், பொதுப்பணித்துறையின் மூலம் நீர்வள நில வள திட்டம் மற்றும் குடிமராமத்து திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் ரூ.30.87 கோடி மதிப்பில் மொத்தம் 144 கண்மாய்களில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள நீர்நிலைகளை புனரமைத்து பராமரித்திடும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில் நீர்வள நிலவள திட்டத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் கீழ்வைகை வடிநிலக் கோட்டக் கட்டுப்பாட்டின் கீழ் இராமநாதபுரம் வட்டத்தில் 22 கண்மாய்கள் மற்றும் பரமக்குடி வட்டத்தில் 31 கண்மாய்கள் ஆக மொத்தம் 53 கண்மாய்கள் ரூ.20.51 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் துவங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேபோல குடிமராமத்து திட்டப்பணிகளின் கீழ் நடப்பு நிதியாண்டில் குண்டாறு வடிநிலக் கோட்டத்தில் 14 கண்மாய்கள், முன்னாள் ஜமீன்தாரர்கள் கண்மாய்கள் கோட்டம், காரைக்குடி கட்டுப்பாட்டின் கீழ் 5 கண்மாய்கள் ஆகமொத்தம் 19 கண்மாய்கள் ரூ.147.60 லட்சம் மதிப்பீட்டில் மேம்பாட்டு -பணிகள் மேற்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடியும் நிலையில் உள்ளன.

மேலும் 2017-2018 -ஆம் ஆண்டில் குடிமராமத்து திட்டப்பணிகளின் கீழ் பரமக்குடி, கீழ்வைகை வடிநிலக் கோட்டக் கட்டுப்பாட்டில் மொத்தம் 53 கண்மாய்கள் ரூ.2014.70 இலட்சம் மதிப்பீட்டிலும், குண்டாறு கோட்டம் மதுரை கட்டுப்பாட்டின் கீழ் 25 கண்மாய்கள் ரூ.681.30 இலட்சம் மதிப்பீட்டிலும், மணிமுத்தாறு வடிநிலக்கோட்டம், தேவக்கோட்டை கட்டுப்பாட்டின் கீழ் இரண்டு கண்மாய்கள் ரூ.55.80 இலட்சம் மதிப்பீட்டிலும், முன்னாள் ஜமீன்தாரர்கள் கண்மாய் கோட்டம், காரைக்குடி கட்டுப்பாட்டின்கீழ் ஐந்து கண்மாய்கள் ரூ.112.55 இலட்சம் மதிப்பீட்டிலும், சிறப்பு திட்டக் கோட்டம், மானாமதுரை கட்டுப்பாட்டின் கீழ் பரமக்குடி வட்டத்தில் 6 கண்மாய்கள் ரூ.201.70 இலட்சம் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் மாவட்டத்தில் 91 கண்மாய்கள் ரூ.3065.70 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. எனவே விவசாயிகளின் நலனை பாதுகாத்திடும் வகையிலும், பொதுமக்களின் நீர் தேவையினை பூர்த்தி செய்திடும் விதமாகவும் மாவட்டத்தில் உள்ள நீர்நிலைகள் சீரமைத்து பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டு வருகின்றது.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**